பக்கங்கள்:-16

காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 21 | சனிக்கிழமை | 06.09.2025 | அதிர்வு 036 |
|---|---|---|---|---|---|

## 240 ஐத் தொட்ட எலும்புக்கூடுகள்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று வெள்ளிக்கிழமை புதிதாக 5 06







# செம்மணியில் கால்கள் மடிக்கப்பட்டு அமர்ந்த நிலையில் என்புக்கூடு மீட்பு!

## இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் இன்றுடன் நிறைவு

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் கால்கள் மடிக்கப்பட்டு அமர்ந்த நிலையில் என்புக்கூட்டுத் தொகுதி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகளின் போது நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை குவியலாக எட்டு மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அவற்றைச் சுத்தம்செய்யும்பணிகள்நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. 06







2015 ஜனவரி 9 ஆம் திகதிக்கு முன்பு இந்தியாவுக்குள் உரிய ஆவணங்கள் இன்றி நுழைந்து, அந்த நாட்டில் அகதிகளாகப் பதிவு செய்த இலங்கைத் தமிழர்கள் இப்போது அங்கு சட்டபூர்வமாக தங்குவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதாவது அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட மாட்டாது என்பது இப்போதைய கஸட் அறிவிப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

முறையான பாஸ்போர்ட், பயண ஆவணங்கள் அல்லது விசா இன்றி அவர்கள் நாட்டுக்குள் இருக்கின்றமை தொடர்பில் குற்றவியல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட மாட்டாது. அவ்விடயத்தில் அவர்களுக்கு தண்டனை விலக்கு அளிக்கப்படுகின்றது.

இந்த உறுதிப்படுத்தல் தமிழகத்தில் அகதிகளாகத் தங்கி இருக்கும் பல்லாயிரம் ஈழத் தமிழர்களுக்கு ஆறுதல் தரும் செய்தியாகும். 06



# சர்வதேச மன்றங்களில் இலங்கைக்கு இத்தாலி ஆதரவு

## ஹரிணியுடனான சந்திப்பில் மரியா திரிபோடி தெரிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியத்துடன் தற்போதுள்ள உறவுகளை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய இத்தாலியின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் மரியா திரிபோடி, சர்வதேச மன்றங்களில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாகவும் உறுதியளித்தார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இத்தாலியின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் மரியா திரிபோடிவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை அலரி மாளிகையில் நடைபெற்றது.

அரசியல் கலந்துரையாடல்களுக்கான வாய்ப்பை அதிகரிப்பது, வர்த்தக மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது மற்றும் கலாசார மற்றும் கல்விப் பரிமாற்றங்களை வலுப்படுத்துவது குறித்து இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது.

பலமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துதல் மற்றும் ஊழலற்ற ஒரு நிலையான தேசத்தை முன்னேற்றுவதற்கான தற்போதைய அரசின் வேலைத்திட்டம் குறித்து பிரதமர் இதன் போது வலியுறுத்தினார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் தற்போதுள்ள உறவுகளை மேலும் வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும், இத்தாலியுடனான நீண்ட கால நட்பைப் பாராட்டியும் சர்வதேச மன்றங்களில் இலங்கைக்கு ஆதரவளிப்பது குறித்தும் பிரதமர் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையின் அண்மைய முன்னேற்றங்களை மரியா திரிபோடி பாராட்டினார்.

அத்துடன் தற்போதைய வேலைத் திட்டங்களுக்கு இத்தாலியின் தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கான இத்தாலியின் தூதுவர் டாமியானோ பிராங்கோவிக் உள்ளிட்ட இத்தாலிய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்திய சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினர், இலங்கைப் பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சாகரிகா போகாவத்த, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுகீஷ்வர குணரத்ன, அதே அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கப் பிரிவின் பணிப்பாளர் இசூரிகா கருணாரத்ன ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.









# கிருசாந்தி நினைவேந்தல் நாளை

கடந்த 1996 ஆம் ஆண்டு சந்திரிகா அரசாங்கத்தின் ஆட்சியில் சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசுவாமியின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு செம்மணி வளைவில் நடைபெற ஏற்பாட்டுக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு செம்மணி முற்றத்தில் நிகழ்வு ஆரம்பமாகும். முதலில் நினைவுச் சுடரேற்றல் மற்றும் மலர் வணக்கம் இடம்பெறும். நினைவுப் பகிர்வைத் தொடர்ந்து 'வாசலிலே கிருசாந்தி' – கவிதைத் தொகுப்பு வெளியீடு செய்யப்படும். ஆவண காட்சிப்படுத்தல் அதைத் தொடர்ந்து இடம்பெறும்.








# வவுனியாவில் திருவிழாவுக்கென பட்டாசுகளை ஏற்றி வந்த வாகனம் தீயில் எரிந்து நாசமானது

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் சப்பறத் திருவிழாவுக்கு பட்டாசுடன் வந்த வாகனம் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, வெளிக்குளம் பிள்ளையார் ஆலயத்தின் சப்பறத் திருவிழா நேற்று இரவு இடம்பெற இருந்த நிலையில், சப்பற திருவிழாவின் போது வெடி கொளுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட பட்டாசுகளை இறக்கிக் கொண்டிருந்த பட்டா ரக வாகனம் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

இதன்போது வாகனத்தில் இருந்த பட்டாசுகளும் வெடித்துள்ளன.

சம்பவம் தொடர்பில் வவுனியா மாநகர சபை தீயணைப்பு பிரிவினருக்கு அறிவித்ததை அடுத்து தீயணைப்பு பிரிவினரும் ஆலயத்தில் நின்ற மக்களும் இணைந்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும், பட்டா ரக வாகனத்தின் பின்பகுதி முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. இது தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.







# யாழ் பல்கலைக்கழகத்தின் வேந்தராக பேராசிரியர் ராஜரட்ணம் குமாரவடிவேல்



யாழ் பல்கலைக்கழக வேந்தராக பேராசிரியர் ராஜரட்ணம் குமாரவடிவேலை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா நியமித்துள்ளார்.

இதற்கான எழுத்து மூலமான கடிதம் ஓகஸ்ட் 27ஆம் திகதியிடப்பட்டு ஜனாதிபதியின் செயலாளர் என்.எஸ்.குமநாயக்காவினால் வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இந்தப் பதவியை அவர் வகிப்பார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1966-1970 ஆம் ஆண்டு பயின்ற குமாரவடிவேல் பௌதீகத் துறையில் முதல் தர சிறப்புப் பட்டம் பெற்றவர். பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் 1975 இல் கலாநிதிப் பட்டம் பெற்ற அவர் 1976 முதல் யாழ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர். 2006 - 2007 ஆம் ஆண்டுகளில் - மிக நெருக்கடியான காலகட்டத்தில் - யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தராக பொறுப்போடு சிறப்புப் பணியாற்றியவர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2015 முதல் 2020 வரை அவர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினராகவும் அவர் பணி புரிந்தவர்.

தமிழ்ச் செயல்பாட்டாளர், தமிழ் உணர்வாளர், அடையாளம் நிறுவன இயக்குநர், பல்கலைக் கழக முன்னாள் சட்ட விரிவுரையாளர் சட்டத்தரணி கு.குருபரனின் தந்தை இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 5 ஆயிரத்து 167 பேர் ஒரே நாளில் கைது!



இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5 ஆயிரத்து 167 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 724 பேரும், சந்தேகத்தின் பேரில் 26 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 269 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 195 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 44 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 9 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 900 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# 7 நாள்களில் 3 ஆயிரத்து 27 பேர் போதைப்பொருள்களுடன் கைது!

இலங்கையில் கடந்த மாதம் (ஆகஸ்ட்) 29ஆம் திகதி முதல் இந்த மாதம் (செப்டெம்பர்) 4 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருள்களுடன் 3 ஆயிரத்து 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, ஹெரோயின் போதைப் பொருளுடன் 1011 பேரும், ஐஸ் போதைப் பொருளுடன் 972 பேரும், ஹேஷ் போதைப்பொருளுடன் 28 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 913 பேரும், கஞ்சா செடிகளுடன் 29 பேரும், போதை மாத்திரைகளுடன் 59 பேரும், சட்டவிரோத சிகரட்டுகளுடன் 15 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது ஒரு கிலோ 907 கிராம் 606 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், ஒரு கிலோ 856 கிராம் 529 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், ஒரு கிலோ 342 கிராம் 62 மில்லிகிராம் ஹேஷ் போதைப்பொருளும், ஆயிரத்து 59 கிலோ 899 கிராம் 634 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும், 48 ஆயிரத்து 925 கஞ்சா செடிகளும், 6 ஆயிரத்து 733 போதை மாத்திரைகளும், 4 ஆயிரத்து 53 சிகரெட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.



# ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் ஆயிரத்துக்கும் அதிக விபத்துக்கள்

2025 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 31 ஆம் திகதி வரையான முதல் ஆறு மாதங்களில் 1,256 கோர விபத்துகளில் 1,332 பேர் உயிரிழந்தனர்.

இலங்கையின் அண்மைய வரலாற்றில் மிக மோசமான பேருந்து விபத்தாக, 2005 ஏப்ரல் 27 ஆம் திகதி குருநாகல்- கொழும்பு பிரதான வீதியில் உள்ள யாங்கல்மோதர ரயில் கடவையில் நிகழ்ந்த விபத்து கருதப்படுகிறது.

கல்கிரியாகமவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் , வலகும்புர மற்றும் பொல்கஹவெல தொடருந்து நிலையங்களுக்கு அருகே தொடருந்து பாதையில் கவனக்குறைவாக நுழைந்தது.

இதன் போது கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி நோக்கிச் பயணித்த கடுகதி ரயிலுடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த கோர விபத்தில் 41 பேர் உயிரிழந்த நிலையில், 35 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்துக்குப் பின்னரும் இலங்கையில் பல பஸ் விபத்துகள் நிகழ்ந்தாலும், அவை யாங்கல்மோதர விபத்தின் தீவிரத்தை எட்டவில்லை.

இந்த நிலையில், பஸ் விபத்துகளுக்கு முக்கிய காரணம் சாரதிகளின் கவனக் குறைவாக வாகனம் ஓட்டுதல் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், 2023 ஆம் ஆண்டில் வீதி விபத்துகளால் 2,341 பேர் உயிரிழந்திருந்த நிலையில், 2024 ஆம் ஆண்டில் இது 2,521 ஆக உயர்ந்திருந்தது.

இந்த நிலையில், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 1,256 கோர விபத்துகளில் 1, 332 பேர் உயிரிழந்தனர்.

இதில், தனியார் பஸ் விபத்துகளில் 60 பேரும், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் விபத்துகளில் 30 பேரும் உயிரிழந்துள்ளனர்.

2025 மே 11 ஆம் திகதி ரம்பொட- கெரண்டியெல்ல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 22 பேர் உயிரிழந்த நிலையில், 35 பேர் காயமடைந்தனர்.

இது இலங்கையின் சமீபத்திய வரலாற்றில் பதிவாகிய, மிகவும் துயரமான பஸ் விபத்தாகப் பதிவாகியது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் இரவு எல்ல- வெல்லவாய பிரதான வீதியில் 24 ஆவது கிலோ மீற்றர் தூண் அருகே இடம்பெற்ற மற்றொரு பேருந்து விபத்தில், இரண்டு சிறுவர்கள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர்.

16 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில், இந்த விபத்துகளில் பஸ் சாரதிகளின் கவனக்குறைவே முதன்மைக் காரணமாகக் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சில சந்தர்ப்பங்களில், பஸ்களில் இயந்திரக் குறைபாடுகளும் விபத்துகளுக்கு வழிவகுப்பதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# சில உணவுகளின் விலைகள் குறைப்பு

ரைஸ், கொத்து மற்றும் பிரியாணி ஆகிய உணவுகளின் விலைகள் 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவகம் மற்றும் மதுபான சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்தார்.

அத்தோடு, அனைத்து வகையான சிற்றுண்டி உணவுகளின் விலைகளும் 10 ரூபாவால் குறைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து கருத்து தெரிவித்த அகில இலங்கை உணவகம் மற்றும் மதுபான சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான், இந்த விலைக் குறைப்பை வாடிக்கையாளர்களுக்கு உரிய முறையில் வழங்குமாறு உணவக உரிமையாளர்களை கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.





# ஆண்டுக்கு 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள்

## அரசாங்கத்தின் இலக்கு

எதிர்வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் வருடாந்தம் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில், அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சவாலை நடைமுறைப்படுத்த முடியுமானால் 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருடாந்தம் ஈட்ட முடியும் என அவர் நம்பிக்கையினை வெளியிட்டுள்ளார்.

இதற்கேற்ற வகையில் சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட பணியாளர்களை உருவாக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலா மற்றும் விருந்தக துறைக்கு மேலதிகமாக பயிற்றப்பட்ட 8 லட்சம் நானாவித பணியாளர்களின் சேவை அவசியமாகிறது.

அதற்கு ஏற்றவகையில், சர்வதேச தரத்தை கொண்ட பயிற்சிகள் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஆராயப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு மேல் இவ்வாறு தமிழகத்தில் தங்கியிருக்கும் ஈழ அகதிகளுக்கு சட்டபூர்வ குடியுரிமை வழங்குவதற்கான நடவடிக்கையின் முன்னாயத்தமே இந்த கஸட் அறிவிப்பு என்று சில தரப்புகள் கூறுகின்றன. அது உண்மையாகவும் இருக்கலாம்.

இந்த விடயத்தில் இந்திய அரசு தீர்மானத்திருக்கும் அல்லது வரையறுத்து இருக்கும் 2015 ஜனவரி ஒன்பதாம் திகதி என்பது இலங்கையை பொறுத்தவரை ராஜபக்ஷக்களின் ஆட்சி முடிவடைந்து, நல்லாட்சி அரசின் அதிகாரம் தொடங்கிய நாள் என்பதுதான் கவனிக்கப்பட வேண்டியது.

2015 ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்பட்டது ஜனவரி ஒன்பதாம் திகதி ஆகும். அன்றைய தினத்தில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி ஏற்க, தொடர்ந்து நல்லாட்சி அரசு அதிகாரத்திற்கு வந்தது.

இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தைத் தொடர்ந்து ராஜபக்ஷக்களின் ஆட்சி முடிவுக்கு வந்த நாள் வரையிலும் இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த ஈழத் தமிழர்களுக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கும் திட்டத்தை முன்னெடுப்பதற்கு தற்போதைய இந்தியாவின் பா.ஜ.க. அரசு முடிவு எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

90ஆம் ஆண்டுகளில் இருந்து இவ்வாறு அகதிகளாகப் போய்ச் சேர்ந்த ஈழத் தமிழர்கள் இன்னமும் சுமார் ஒரு லட்சம் பேர் அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நாட்டுப் பிரஜாவுரிமை இன்னும் வழங்கப்படவில்லை.

அப்படி அங்கு ஏதிலிகளாக இருக்கும் ஈழத் தமிழர்கள் தாயகம் திரும்புவார்களாயின் தாயகத்தில் குறைந்திருக்கும் ஈழத் தமிழர்களின் எண்ணிக்கையைக் கணிசமாகக் கூட்ட முடியும் என்ற கருத்து நிலைப்பாடு தமிழ் அரசியல் தலைவர்கள் மத்தியில் இருக்கின்றது.

இந்தச் சமயத்தில்தான் இந்தியாவில் தங்கி இருக்கும் ஈழ அகதிகளுக்கு இந்தியல் பிரஜாவுரிமை வழங்கும் புது டில்லியின் திட்டம் வெளிவந்திருக்கின்றது.

இப்படி ஈழத் தமிழ் மண்ணுக்கு சொந்தமான சுமார் ஒரு லட்சம் பேரை தமிழகம் தங்களர் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளும் நிலைமை வந்திருப்பது இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழர்களைப் பொறுத்த வரை பெரும் துரதிஷ்டமான செய்தியாகும்.

இந்த ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவார்களாயின் தாயகத்தில் அவர்கள் சார்பில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் மேலும் உயரும் வாய்ப்பு உள்ளது. ஆனால் அது பற்றி எல்லாம் சிந்திக்காமல், இந்திய பிரஜாவுரிமை பெறும் வகையில் தமிழகத்தில் தங்கியுள்ள நமது ஈழ அகதிகள் மாறுவார்களாயின் அது அவர்களின் எதிர்காலத்துக்கும் நல்லதாகலாம். ஆனால் அது, இலங்கையில் நலிவுற்று வரும் ஈழத் தமிழினத்தை மீண்டும் நிலைநிறுத்துவதற்கான எத்தனத்தில் அது பயனற்ற விவகாரமாகவே அமையும்.

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது, அவற்றுள் 227 என்று இலக்கமிடப்பட்ட என்புக் கூட்டுத் தொகுதி கால்கள் மடிக்கப்பட்டு அமர்ந்த நிலையில் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் தெளிவான விளக்கத்தைப் பெற யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை மூத்த விரிவுரையாளர் ரமணராஜா புதைகுழிப் பகுதிக்கு அழைக்கப்பட்டு, அது தொடர்பான அவரது அவதானிப்புகள், விளக்கங்கள் கோரப்பட்டன.

அவர் தனது அவதானிப்பின்படி, மேற்படி மனித என்புத் தொகுதி இந்து முறைப்படி முறையாக அடக்கம் செய்யப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை எனவும், என்புக்கூட்டின் கைகள் காணப்படும் நிலைமை உள்ளிட்ட காரணிகளால் அது முறையாக அடக்கம் செய்யப்பட்ட என்புக்கூடு இல்லை எனவும் தெரிவித்தார்.

அதையடுத்து அது தொடர்பான விவரமான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ். மேலதிக நீதிவான் செ.லெனின்குமார் உத்தரவிட்டார்.

இதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் அனுமதித்த 45 நாள்கள் இன்று சனிக்கிழமையுடன் நிறைவு பெறவுள்ள நிலையில், அடுத்த வழக்கு விசாரணைகள் தொடர்பில் இன்று நீதிவான் திகதியிடுவார் என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

## 240 ஐத் தொட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணிமனிதப்புதைகுழியில்இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாள்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை 44 ஆவது நாளாக அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது புதிதாக 5 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன.

அதற்கமைய இதுவரையில் 240 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 11 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இதன் மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 235 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.







# காற்றாலைத் திட்டத்தை மன்னார் மக்களின் அனுமதியின்றி நடைமுறைப்படுத்த முடியாது

## தாம் எப்போதும் மக்களின் பக்கம் என்கிறார் ரவிகரன் எம்.பி.



**(விஜயரத்தினம் சரவணன்)**

மன்னார் மக்களின் அனுமதியின்றி மன்னாரில் காற்றாலைத் திட்டத்தை அமுல்படுத்த முடியாதெனத் தெரிவித்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இந்தவிடயத்தில் தாம் எம்போதும் மன்னார் மக்களின் பக்கமே செயற்படுகிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்களை அமைக்கும் சர்ச்சைக்குரிய விவகாரம் தொடர்பில் கடந்த மாதம் 13ஆம் திகதியன்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுவர் மற்றும் மன்னார் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினர் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் இந்தக் காற்றாலைத் திட்டம்தொடர்பில் உரிய தரப்பினர் மக்களுக்கு தெளிவுபடுத்துவதுடன், இக்காற்றாலைத் திட்டம் தொடர்பில் மன்னார் மக்களின் அபிப்பிராயங்களைப் பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்தோடு அதுவரை ஒரு மாத காலத்திற்கு காற்றாலைத் திட்டத்தை இடைநிறுத்திவைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று வலுசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழுவினர் மன்னார் மக்களுக்கு காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

குறிப்பாக மன்னார்த்தீவில் இக்காற்றாலைத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ள சாந்திபுரம், தாழ்வுபாடு, தோட்டவெளி, ஓலைத்தொடுவாய், பேசாலை உள்ளிட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கு காற்றாலைத் திட்டம் தொடர்பான தெளிவுபடுத்தலை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டு, தெளிவுபடுத்தல் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அந்த வகையில் முதலாவது தெளிவுபடுத்தல் கலந்துரையாடல் மன்னார் சாந்திபுரம் பகுதியில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

மக்கள் இந்தக் காற்றாலைத் திட்டத்திற்கு அனுமதி வழங்கவில்லை.

மக்களின் அனுமதியில்லாமல், மக்களின் ஒத்துழைப்பில்லாமல், மக்களை எதிர்த்துக்கொண்டு இந்தக் காற்றாலைத் திட்டத்தை மன்னாரில் அமுல்படுத்த முடியாது.

இந்த விடயத்தில் நான் எப்போதும் மன்னார் மக்களின் பக்கம்தான் இருப்பேன் – என்றார்.





# காசியில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்ட ‘விடுதலை நீர்’

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி காசி உட்பட இந்தியாவின் பல தீர்த்தங்களில் இருந்து புனித நீர் எடுத்து வரப்பட்டு விடுதலை நீர் சேகரிப்பு பானையில் சேமிக்கப்பட்டது.

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு பகுதிகளில் கடந்த நாட்களில் விடுதலை நீர் சேகரிக்கப்பட்டது.

அந்தவகையில் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வலுச் சேர்க்கும் வகையில் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் இந்த விடுதலை நீர் சேகரிப்பு இடம்பெற்று வருகின்றது.

அதனடிப்படையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காசி உட்பட இந்தியாவின் பல தீர்த்தங்களில் இருந்து புனித நீர் எடுத்து வரப்பட்டு விடுதலை நீர் சேகரிப்பு பானையில் சேமிக்கப்பட்டது.

இந்த நீர் சேகரிப்பு நிகழ்வு சிவகுரு ஆதீனத்தில் நடைபெற்றது.

இதில் தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர், அரசியல் கைதிகளின் உறவுகள், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர், தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்த உறவுகள், யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# படையினருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு பொன்சேகாவின் கருத்துக்களே காரணம்

## நாமல் எம்.பி. தெரிவிப்பு

பொன்சேகாவின் வெள்ளைக்கொடி கருத்துக் காரணமாகவே படையினருக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவர் அதனைக் கூறி இருக்காவிட்டால், படையினருக்கு எதிரான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் தப்பிச்செல்வதற்காக மஹிந்த ராஜபக்ஷ போர் நிறுத்தம் செய்ய முன்வந்தார் என சரத்பொன்சேகா கூறியுள்ள விடயம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே நாமல் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

போரில் விடுதலைப்புலிகளால் வெள்ளைக்கொடி காட்டப்பட்டபோது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்று பொன்சேகா கூறியிருந்தார்.

இந்தநிலையில் அவர் வெளிநாட்டில் ஒன்றையும், இங்கு



வேறொன்றையும் கூறுவதாக நாமல் தெரிவித்துள்ளார்.

பொன்சேகா போரை முடிக்கப் பங்களிப்பு செய்தவர்.

அதனாலேயே அவர் மனம் நோகும்படி தாம் கருத்துகளை முன்வைப்பதில்லை என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனால் பொன்சேகா தற்போது முழுநேர அரசியல்வாதி என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# குஷ் போதைப்பொருளுடன் இந்திய பிரஜை ஒருவர் கைது

10 கிலோவிற்கும் அதிக குஷ் போதைப் பொருளுடன் இந்திய பிரஜை கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

43 வயதான மேற்படி இந்தியப் பிரஜை தாய்லாந்தின் பாங்கொக்கிலிருந்து நேற்று காலை 07 மணியளவில் நாட்டுக்கு வருகைதந்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சூட்சுமமான முறையில் பயணப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் பெறுமதி 107.5 மில்லியன் ரூபா என இலங்கை சுங்கம் தெரிவித்தது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அண்மையில் பொருத்தப்பட்ட புதிய ஸ்கேன் இயந்திரத்தின் மூலம் குறித்த குஷ் போதைப்பொருள் தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொறுப்புத் தவறினால்....!

நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கிலான விசேட செயற்திட்டமொன்று சர்வதேச புலம்பெயர்வு அமைப்பின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபையினால் தயாரிக்கப்பட்டு வருகிறது என்று ஒரு செய்தி வெளியாகியிருக்கின்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலங்களுக்கான எல்லை நிர்ணயம், படையினரால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் தனியார் காணிகள், அரச கட்டமைப்புக்கள் உள்ளிட்ட ஏனைய தரப்பினரால் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் காணி சுவீகரிப்புக்கள் என்பன உள்ளடங்கலாக காணி சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் சமகாலத்தில் இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளன.

இப்பிரச்சினைகளுக்கு சுமுகமானதும், நியாயமானதுமான முறையில் தீர்வுகாணும் நோக்கில் சர்வதேச புலம்பெயர்வு அமைப்பின் (ஐ.ஓ.எம்.) அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபையினால் விசேட செயற்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

அத்தோடு இச்செயற்திட்டத்தின்கீழ் அரச கட்டமைப்புக்கள், பாதுகாப்புத் தரப்பினர், சிவில் சமூக அமைப்புக்கள், படையினர் வசமுள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் உள்ளடங்கலாக இவ்விவகாரத்துடன் தொடர்புடைய சகல தரப்பினரும் உள்வாங்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இச்செயற்திட்டத்தின் ஊடாக வடக்கு, கிழக்கில் காணிப்பிரச்சினைகளுடன் தொடர்புடைய தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தல், படையினர் வசமுள்ள தனியார் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், எல்லைகளை உரியவாறு மீள்நிர்ணயிப்பதற்கு அவசியமான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை உள்ளகக் கட்டமைப்புக்களுக்கு வழங்கல் உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சட்ட ரீதியான - பொறுப்புள்ள - அரசு என்ற முறையில் தன் நாட்டின் பிரஜைகள் தொடர்பாக தனது கடப்பாட்டை, பொறுப்பை, கடமையை, நிறைவு செய்வதற்கு நாட்டின் அரசு தவறுகின்ற போது, இவ்வாறு வெளித்தரப்புகள் - ஐ.நா. போன்றவை - தலையிட்டு அந்தப் பணியை தாமே செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை இலங்கை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை என்று கூறப்படும் யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவான விசாரணைகளை முன்னெடுக்க இலங்கை அரசு பின்னடித்து நிற்பதால் - இவ்விடயத்தில் தன்னுடைய பொறுப்பான கடமையை அது செய்யத் தவறி இருக்கின்றமையால் - அத்தகைய வேலையை ஐ.நா. தானாகவே ஆரம்பிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே இவ்விடயங்களை ஒட்டி ஆவணங்கள், ஆதாரங்கள், சான்றுகள், சாட்சியங்கள் போன்றவற்றை சேகரித்துப் பாதுகாக்கும் வேலையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகம் முன்னெடுத்து வருகின்றது.

இப்போது மக்களின் காணி விடயத்திலும் அதனை ஆக்கிரமித்து வைத்திருக்கும் படையினரும் மற்றும் அரச கட்டமைப்புகளும் நீதி, நேர்மையான முறையில் அவற்றை மக்களிடம் திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்காமல் விட்டால், அந்தப் பணியையும் - அடையாளம் கண்டு வெளிப்படுத்துவதற்கான வேலையை - ஐ.நா.வே முன்னெடுக்கும் என்பது தான் இப்போது வெளியாகும் செய்திகளின் தாற்பரியம்.

கொழும்பு தன்னைத் திருத்தாவிட்டால், இத்தகைய பல விடயங்கள் வெளித்தரப்புக்களினால் கையாளப்படும் சூழல் உருவாகும். அதன் பின்னர் நாட்டின் இறைமை பறிபோய் விட்டது, நாட்டின் சுயாதீனத்தில் தலையிட்டு விட்டார்கள் என்றெல்லாம் கூக்குரலிடுவதில் அர்த்தமில்லை.



# மத்திய பிரதேச அரச வைத்தியசாலையில் எலி கடித்ததில் 2 குழந்தைகள் உயிரிழப்பு

## ராகுல் காந்தி கண்டனம்

மத்திய பிரதேசத்தில் உள்ள மகாராஜா யஷ்வந்த்ராவ் அரச வைத்திய சாலையில் எலி கடித்ததில் இரு குழந்தைகள் உயிரிழந்த சம்பம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், இது குறித்து மக்களவை எதிர் கட்சித் தலைவர் ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி,

“மத்தியப் பிரதேசத்தின் மிகப்பெரிய அரசு மருத்துவமனையில் எலி கடித்து இரண்டு பிறந்த குழந்தைகள் இறந்தனர். இது தற்செயல் நிகழ்வு அல்ல, இது முழுமையான கொலை. இந்த சம்பவம் மிகவும் கொடூரமானது, மனிதாபிமானமற்றது மற்றும் அர்த்தமற்றது. இதைப் பற்றிக் கேள்விப்பட்டாலே முதுகுத்தண்டில் நடுக்கம் ஏற்படுகிறது.

சுகாதாரத் துறை வேண்டுமென்றே தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்போது சிகிச்சை பணக்காரர்களுக்கு மட்டுமே. ஏழைகளுக்கு, அரசு மருத்துவமனைகள் இனி உயிர் காக்கும் இடங்களாக இல்லை, ஆனால் மரணக் குகைகளாக மாறிவிட்டன.

பிரதமர் மோடியும் மத்தியப் பிரதேச முதல்வரும் வெட்கித் தலைகுனிய வேண்டும். உங்கள் அரசாங்கம் நாட்டின் மில்லியன் கணக்கான ஏழைகளின் சுகாதார உரிமையைப் பறித்துவிட்டது.

இப்போது குழந்தைகள் அவர்களின் தாய்மார்களின் மடியில் இருந்து பறிக்கப்படுகிறார்கள்” என்று ராகுல் கடுமையாக சாடியுள்ளார்.

இதற்கிடையே இந்த சம்பவம் குறித்து விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்க இந்தூர் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.


# அஜித்தின் ‘குட் பேட் அக்லி’ படத்தில் அனுமதியின்றி பாடல்கள் பயன்பாடு

## இளையராஜா வழக்கு

நடிகர் அஜித் நடித்த ‘குட் பேட் அக்லி’ திரைப்படத்தில், அனுமதி பெறாமல் தனது பாடல்களை பயன்படுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து இசையமைப்பாளர் இளையராஜா சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

மைத்திரி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பில் நடிகர் அஜித் நடிப்பில் குட் பேட் அக்லி திரைப்படம் அண்மையில் வெளியானது. இந்த திரைப்படத்தில், இளமை இதோ இதோ, ஒத்த ரூபாயும் தாரேன், என் ஜோடி மஞ்சக் குருவி ஆகிய பாடல்களை அனுமதியில்லாமல் பயன்படுத்தியுள்ளதாகக் கூறி இசையமைப்பாளர் இளையராஜா சார்பில் அவரது வழக்கறிஞர்கள் கே.தியாகராஜன், ஏ.சரவணன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

அந்த மனுவில், அனுமதியில்லாமல் பயன்படுத்திய பாடல்களை படத்தில் இருந்து நீக்கவும், 5 கோடி ரூபா இழப்பீடு கோரியும் அனுப்பிய நோட்டீசுக்கு பதிலளித்த தயாரிப்பு நிறுவனம், சட்டப்பூர்வ உரிமையாளரிடம் இருந்து பாடல்களை பயன்படுத்த அனுமதி பெற்றதாகக் கூறியதாகவும், ஆனால் அந்த உரிமையாளர் யார் என்பதை தெரிவிக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.



தனது அனுமதியில்லாமல் பாடல்களை பயன்படுத்தியது பதிப்புரிமைச் சட்டத்துக்கு விரோதமானது என்பதால், படத்தில் பாடல்களை பயன்படுத்த தடை விதிக்க வேண்டும். உரிய இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் முன், செப்டம்பர் 8 ஆம் திகதி விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது.




# செங்கோட்டையன் மூலம் பழனிசாமிக்கு பா.ஜ.க. மறைமுக நெருக்கடி கொடுக்கிறது

## திருமாவளவன் தெரிவிப்பு

செங்கோட்டையன் மூலம் பழனிசாமிக்கு பா.ஜ.க. மறைமுக நெருக்கடி கொடுக்கிறது என்று வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

மதுரை அண்ணா பஸ் நிலையம் அருகில் வி.சி.க. சார்பில் நடந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் அக்கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் எம்.பி பங்கேற்றார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“அ.தி.மு.கவை ஒருங்கிணைப்பதற்கு செங்கோட்டையன் எடுத்து வரும் முயற்சி பாராட்டுக்குரியது. அது அவர்களின் உட்கட்சி பிரச்சினை என்றாலும் கூட அந்தக்கட்சியும் பெரியாரின் இயக்கத்தின் பாசறையில் உருவான ஒரு அரசியல் இயக்கம் என்கிற வகையில் அதன் மீது நமக்கு ஒரு மதிப்பும், மதிப்பீடும் உண்டு. ஆகவேதான் பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ் போன்ற சக்திகளின் பிடியில் அந்த இயக்கம் சிக்கி சீரழிந்து விடக்கூடாது என்கிற கவலையை அவ்வப்போது வெளிப்படுத்தியிருக்கிறோம்.

இப்போதும் நமக்கு அந்தக் கவலை உண்டு. செங்கோட்டையன் எந்த பின்னணியில் இயங்குகிறார் என்று நமக்குத் தெரியாது. ஆனால் பொதுவாக இந்தப் பின்னணியில் பா.ஜ.கவின் கை இருக்கும் என்ற கருத்தும் நிலவுகிறது. அவ்வாறு இருக்குமேயானால் அ.தி.மு.கவின் எதிர்காலத்துக்கு உகந்ததாக இது அமையாது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு மறைமுகமான நெருக்கடியை பா.ஜ.க. தான் உருவாக்குகிறது என்கிற விமர்சனம் இப்போதும் வலுவாக எழுந்துள்ளது.

பா.ஜ.க. எந்தெந்த மாநிலங்களில் எல்லாம் இப்படி மாநிலக் கட்சிகளோடு கூட்டணி அமைக்கிறதோ அந்த மாநிலக் கட்சிகளை மெல்ல, மெல்ல நீர்த்துப்போகச் செய்திருக்கிறது என்பதுதான் கடந்த கால வரலாறு. அப்படி ஒரு நிலை அ.தி.மு.கவுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பது தான் நம்மைப் போன்றவர்களின் கவலை.

செங்கோட்டையன் இன்னும் முழுமையாக மனம் திறக்கவில்லை. இப்போது கூட யார், யாரை சேர்க்க வேண்டும் என்பதைக் கூட வெளிப்படையாகச் சொல்லவில்லை. பழைய மூத்த தலைவர்களை எல்லாம் ஒருங்கிணைக்க வேண்டும் என்கிறார், யார் அந்த பழைய தலைவர்கள் என்பதை ஏன் வெளிப்படையாக சொல்லத் தயங்குகிறார் என்ற கேள்வி எழுகிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# 26 சமூக ஊடகங்களுக்கு நேபாளத்தில் தடை விதிப்பு

சுமார் 26 சமூக ஊடகங்களுக்கு நேபாளத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பேஸ்புக், இன்ஸ்டாகிராம், யூடியூப், எக்ஸ் தளங்கள் உள்ளிட்டவைக்கு அந்நாட்டு அரசாங்கம் தடை விதித்துள்ளது.

இந்த தடை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் என அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேபாள அரசின் விதிமுறைகளுக்கு உட்படாத சமூக ஊடகங்களுக்கே தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.



# அமெரிக்கா – ஜப்பான் இடையே புதிய வர்த்தக வரி ஒப்பந்தம்

அமெரிக்கா – ஜப்பான் இடையிலான புதிய வர்த்தக வரி தொடர்பாக புதிய ஒப்பந்தத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

முன்னதாக, இலங்கை, இந்தியா, சீனா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பரஸ்பர தீர்வை வரிகளை விதித்துள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்கா – ஜப்பான் இடையிலான புதிய வர்த்தக வரி தொடர்பாக புதிய ஒப்பந்தத்தில் ட்ரம்ப் கையெழுத்திட்டு இருக்கிறார்.

அதன்படி அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் ஜப்பான் பொருட்களுக்கு 15 சதவீதம் அடிப்படை வரி விதிக்கப்படுகிறது.

அதே சமயம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விண்வெளி தயாரிப்புகள், மருந்துகள் மற்றும் உள்நாட்டில் கிடைக்காத இயற்கை வளங்களுக்கு துறைசார் சிறப்புச் சலுகைகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ட்ரம்ப் கூறும் போது இது அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு இடையேயான வர்த்தக உறவின் புதிய உச்சம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# தாய்லாந்தின் புதிய பிரதமராக அனுதின் சார்ன்விரகுல் தேர்வு



தாய்லாந்தின் புதிய பிரதமராக அனுதின் சார்ன்விரகுல் தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற வாக்கெடுப்பின் பின்னர் அவர் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்மூலம், ஷினவத்ரா என்ற குடும்ப வேட்பாளரை தோற்கடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்தின் மிகவும் சக்திவாய்ந்த அரசியல் வம்சத்தைச் சேர்ந்த பேடோங்டர்ன் ஷினவத்ரா, கம்போடியாவுடனான எல்லைப் பிரச்சினையைக் கையாண்டதில் நெறிமுறை மீறல்களுக்காக கடந்த வாரம் அரசமைப்பு நீதிமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.



# சர்வதேச நீதி கோரிய கையொழுத்துப் போராட்டம் அம்பாறை மாவட்டத்தில் கல்முனையில் ஆரம்பம்

**(பாறுக் ஷிஹான்)**

செம்மணி உட்பட இலங்கையின் வடக்கு, கிழக்கு மண்ணில் உள்ள மனித புதைகுழிகளுக்கானதும் நடைபெற்ற இனப் படுகொலைகளுக்குமான சர்வதேச நீதி கோரிய கையெழுத்துப் போராட்டம் நேற்று முன்தினம் மாலை கிழக்கில் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர மத்தியில் ஸ்ரீ அம்பலத்தடி பிள்ளையார் ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து ஆரம்பித்த இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், முருகேசு சந்திரகுமார், சுரேஷ் பிரேமசந்திரன், காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் சுப்ரமணியம் பாஸ்கரன், கல்முனை மாநகர சபையின் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் ஹென்றி மகேந்திரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் செயலாளரும் கல்முனை தொகுதி இணைப்பாளருமான அருள். நிதான்சன், சமூக சேவையாளர் இரா. பிரகாஷ் உட்பட தமிழ் தேசிய கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு ஆர்வமாகக் கையெழுத்து இட்டனர்.
















# சி.ஐ.டிக்கு 60 ஆயிரம் முறைப்பாடுகள் ஒன்றாகக் கையாள்வதற்கு நெருக்கடி

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள 60 ஆயிரம் முறைப்பாடுகளைக் கையாள்வது நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ளதால், அந்த முறைப்பாடுகளை வேறு பிரிவுகளுக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் பரிசீலித்து வருவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மீதான சுமையைக் குறைக்கும் நடவடிக்கையாக, சில முறைப்பாடுகள் பொலிஸ்மா அதிபரின் மேற்பார்வையின் கீழ் புதிதாக நிறுவப்பட்ட மத்திய குற்றவியல் விசாரணை பணியகத்திற்கு பரிந்துரைக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

எந்தவொரு விசாரணையையும் அல்லது சோதனையையும் நடத்த மத்திய குற்றவியல் விசாரணை பணியகத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் திறமையான விசாரணை செயல்முறையை உறுதி செய்வதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்றும், மத்திய குற்றவியல் விசாரணை பணியகத்திற்கு வரும் முறைப்பாடுகளை அது குறுகிய காலத்தில் விசாரிக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பொலிஸ் துறையில் ஏராளமான கட்டமைப்பு மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும், மத்திய குற்றவியல் விசாரணை பணியகத்தை நிறுவுவது அத்தகைய மாற்றங்களில் ஒன்றாகும் என்றும் அமைச்சர் கூறினார்.




# யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையில் 141; பொஸ்கோவில் 140 மாணவர்கள் சித்தி!

(ந.லோகதயாளன்)

நடந்து முடிந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் 141 மாணவர்களும், யாழ்ப்பாணம் ஜோன் பொஸ்கோவில் 140 மாணவர்களும் வெட்டுப் புள்ளியைத் தாண்டிய புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய 236 மாணவர்களில் 141 மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

இதேபோன்று ஜோன் பொஸ்கோவில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 216 மாணவர்களில் 140 மாணவர்கள் வெட்டுப் புள்ளியை தாண்டி புள்ளிகளைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 06.09.2025




உங்களின் தேவைக்கு பயன்படும் சரியான முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும். இன்று துடிப்பான நாளாக இருக்கும். கவனமுடன் செயல்பட்டால் நன்மை விளையும்.

உங்கள் பணிகளை உறுதியுடனும் எளிதாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். மியூச்சுவல் பண்டில் நீங்கள் பணம் முதலீடு செய்யலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்க உற்சாகமாக இருங்கள். தேவையற்ற எண்ணங்களை தவிர்த்திடுங்கள்.

நீங்கள் கவனமுடனும் விழிப்புடனும் பணியாற்ற வேண்டும். உற்சாகமின்மை மற்றும் சோம்பல் காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கன் ஏற்படலாம். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக பண இழப்பு ஏற்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.இந்தச் சூழ்நிலையை நீங்கள் கையாள வேண்டும்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். அதன் மூலம் பதட்டத்திலிருந்து விடுபட்டு ஆறுதல் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் இருக்கும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் காணப்படும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.




உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நேர்மறை எண்ணத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பது சிறந்தது.

கூடுதல் பணிகள் காணப்பட்டாலும் பணியில் வளர்ச்சி காணப்படும். கவனமுடன் பணியாற்றுங்கள்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சியடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் சிறந்த பலன்கள் காண்பீர்கள். வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களுக்கு வரவேண்டிய நீண்ட கால நிலுவைத் தொகை வந்து சேரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. நீங்கள் விரும்பியதை அடியஅடைய கடினமாக உழைக்க வேண்டும்.

சக பணியாளர்களுடன் மோதல் காணப்படும். பணிகளைக் கையாளும் போது பொறுமை அவசியம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வீட்டில் பெரியவர்களின் உடல் நலத்திற்கு பணம் செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுங்கள். இதனால் உங்கள் உற்சாகம் அதிகமாகும்.

பணிகள் சுமூகமாக நடக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று போதிய பணம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று தொழில் சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறை உங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டும். உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்ற அமைதியான அணுகுமுறை தேவை.

இன்று ஓய்வெடுக்க முடியாதபடி பணிகள் அதிகமாக இருக்கும். பணியில் ஏற்படும் மாறுபாடுகளுடன் ஒத்துப் போக உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை இருக்காது. வரவும் செலவும் சமமாக இருக்கும். இன்று எந்த முக்கிய முடிவும் எடுக்க வேண்டாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.09.2025




உங்களின் தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் காணலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர்வு களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர் கள்.

இன்று அதிக பணவரவு காணப்படும்.ஆன்மீக விஷ யங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களை சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் செய்வீர்கள். முக்கிய நடவடிக்கைகள் இன்று நற்பலங்களைத் தரும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை அனுசரணை யோடு செய்வீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணை யுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப் படுத்த உதவும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். அதிகமாக சேமிக் கும் நிலை இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச் சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று வெற்றி கிடைக்கும் நாள். வெற்றி பெறுவதற்கான உறுதி உங் களிடம் காணப்படும் நாள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். சக பணி யாளர்களுடன் நல்லுறவு கொண்டி ருப்பீர்கள்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும், உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று செழிப் பாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்கள் உங்களுக்கு கவலையையும் குழப்பத் தையும் ஏற்படுத்தும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக் காது. பணியில் தவறுகள் நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே எச்சரிக் கையுடன் இருப்பது நல்லது.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணை யுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. சில சூழ்நிலைகளில் நீங்கள் பணத்தை சரியாக கையாள இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரலாம்.

# தண்டவாளங்களை ஏற்றிச் செல்லுகின்ற ரயில் தடம்புரண்டதால் மலையக ரயில் சேவை பாதிப்பு



**(எஸ் சதீஸ், க.கிஷாந்தன்)**

ஹட்டன் மற்றும் ரொசெல்ல ரயில் நிலையங்களுக்கு இடையிலான 105 – மைல் கல் அருகே நேற்றுக் காலை 10:00 மணியளவில் மலையக ரயில் பாதையை பழுதுபார்ப்பதற்காக ரயில் தண்டவாளங்களை ஏற்றிச் சென்ற கிரேன் கொண்ட தண்டவாள ரயில் தடம் புரண்டதால், மலையக ரயில் சேவை போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில் கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

உலப்பனையிலிருந்து கொட்ட கலைக்கு ரயில் தண்டவாளங்களை ஏற்றிச் செல்லும் தண்டவாள ரயில் இயந் திரமே இவ்வாறு தடம் புரண்டுள்ளது.

தண்டவாள ரயில் குழுவினர் இந்த ரயில் இயந்திரத்தை சீர் செய்யும் பணி யைத் தொடங்கியுள்ளனர்.

தடம் புரண்ட தண்டவாள ரயில் இயந் திரம் சீர் செய்யும் வரை, பதுளையிலி ருந்து கொழும்புக்கு செல்லும் ரயில்கள் ஹட்டன் ரயில் நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பப்படும் என்றும், கொழும் பிலிருந்து பதுளைக்கு செல்லும் ரயில் கள் ரொசெல்லவில் இருந்து திருப்பி அனுப்பப்படும் என்றும் ஹட்டன் ரயில் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித் தார்.